# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.560/2024
Deposition of Witness for L.W.4 / P.W.3

| Name | : | செல்வன் | | | |
|---|---|---|---|---|---|
| Father's Name | : | மூர்த்தி | Occupation | : | கூலி வேலை |
| Village | : | மல்லி நகர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.11.2025**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு மல்லி நகரில் வசித்துக் கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 0705.2021 ஆம் தேதி, மாலை 07.00 மணி அளவில் எனது மனைவி எனக்கு போன் செய்து, ஈரோடு to பவானி செல்லும் சாலையில், சூப்பர் ஃபார்மசி மருந்து கடை முன்பாக, எனது மனைவியின் பெரியப்பாவிற்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும், அவரை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் தகவல் தெரிவித்தார். நான் சுமார் 08.00 மணி அளவில் அரசு மருத்துவமனைக்கு சென்றடைந்தேன். அங்கு சென்றபோது எனது மனைவியின் பெரியப்பாவிற்கு தலையின், பின் மண்டையில் அடிபட்டு, அதன் காரணமாக இறந்து விட்டதாக என்னிடம் தெரிவித்தனர். போலீசார் விபத்து சம்பந்தமாக என்னை விசாரித்தனர். நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். நான் பார்க்கவில்லை அதனால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால், சரிதான். என் பக்கத்து வீட்டுக்காரர் தான் விபத்தை பார்த்து என்னிடம் தகவல் தெரிவித்தார். எனது பெரிய மாமனார் செல்வராஜ்–க்கு வாரிசுகள் யாரும் கிடையாது என்றால், சரிதான். இறந்து போன செல்வராஜ் எனக்கு பெரிய மாமனார் என்பதால் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை: இல்லை.</u>**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dopondent to be correct.

J.M. A.M.C.